JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 66/2025 | Crime No. | 256/2024 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| Name | **Pw.1- பழனிசாமி** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of February 2026 | | |

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் பிரிவு குவிமுச 317 மனு அளிக்கப்பட்டு, நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கருப்பகவுண்டன்புதூரில் குடியிருந்து கொண்டு கருப்பகவுண்டன்புதூர் பிரிவு சக்தி மெயின் ரோட்டில் சிக்கன் கடை வைத்துள்ளேன். தேதி மாதம் நினைவில்லை. கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 06.00 மணி அளவில் நான் எனது கடையில் இருந்தபொழுது எனது கடைக்கு அருகில் மனநலம் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் விபத்தில் அடிபட்டு ரோட்டில் கிடந்தார். நான் ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து அவரை ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்துவிட்டு காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு நான் கொடுத்தது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் இவ்விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடைபெற்ற பிறகுதான் பார்த்தேன். அதனால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**
**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 18/09/2024–ம் தேதியன்று காலை சுமார் 05.00 மணியளவில் நான் எனது கோழி கடையில் இருந்தபோது மனநலம் பாதிக்கப்பட்ட தமிழரசி என்பவர் சக்தி – பவானி மெயின் ரோட்டில் கருப்பகவுண்டன்புதூர் பிரிவு கந்தசாமி ஆட்டுக் கறிக்கடை முன்பு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டில் மேற்படி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த பைக் வேகமாக வந்து தமிழரசியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், மேற்படி விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், அருகில்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.04 06:25:54 +0530

சென்று தமிழரசியை தூக்கி உட்கார வைத்து பார்த்தபோது அவருக்கு இடது காலில் பலத்த இரத்தக் காயமும் பின் தலையில் மொக்கைக் காயமும் ஏற்பட்டிருந்ததாகவும், பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அவரை சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும், போலீசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by

him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.04 06:26:01 +0530

Sd/- (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani